1982 மார்ச் 4]

திரு. இரெ. இராசமாணிக்கம் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். என்னுடைய தொகுதியில் பயங்கரமான கலவரம் ஏற்பட்டு, பல்லாயிரக் கணக்கான ரூபாய் சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன. பலர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற பிரச்சனைகளை இப்படி திடீரென்று எழுந்து கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? ஏதாவது பொதுப் பிரச்சனையாக இருந்தால் சொல்லலாம்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, நேற்றிலிருந்து இராஜ பாளையத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு நடக்கிறது. அங்கே மக்களுக்கு குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்கவில்லை. சாப்பிட்டுவிட்டு, கை கழுவு வதற்கும்கூட தண்ணீர் இல்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி சட்டசபையில் கேட்க வேண்டியதில்லை; அங்கே இருக்கிற நகராட்சியில் சொல்லலாம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, நான் 2, 3 உரிமைப் பிரச்சனைகள் கொடுத்திருக்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி அறையில் வந்து கேளுங்கள்.

4. உரிமைப் பிரச்சினை.

வானொலி மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 246-வது விதியின்கீழ், "வானொலி" மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் இசைவைக் கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் அவர்கள் ஒரு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இப்பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் இசைவை அளிக்கிறேன்.

"சென்னை வானொலி நிலையம் 1-3-1982 அன்று மாலை 7.00 மணி ஒலிபரப்பில் சட்டமன்ற நிகழ்ச்சியைப் பற்றி குறிப்பிட்டபோது எதிர்க் கட்சித் தலைவரின் கேள்வியையும் அதற்கு அமைச்சர் சொன்ன பதிலையும் இருட்டடிப்புச் செய்து இருக்கிறது. கேள்வி-பதில் சம்பந்தமாக ஒரு பகுதியைச் சொல்லிவிட்டு மறுபகுதியை இருட்டடிப்பு செய்வது வேண்டு மென்றே திட்டமிட்டு உள்நோக்கத்தோடு செய்யப்பட்ட காரியம் ஆகும். அது அவையின் உரிமையை மீறிய செயலாகும். எனவே, இதனை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுகிறேன்" என்று திரு. ரகுமான்கான் அவர்கள் தன் முன்னறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இதில் அவை உரிமை மீறல் எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பதைச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் தலைவரவர்களே, சென்னை வானொலிக்கு எதிராக இந்த உரிமை மீறல் பிரச்சனையை நான் அவையில் எழுப்புகிறேன்.

1—3—1982 அன்று காலை கேள்வி நேரத்தின்போது சட்டமன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் திரு. இராஜா முகமது அவர்கள் கங்கை-காவிரி இணைப்புபற்றி விளக்கமான பதில் சொன்னபோது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் எழுந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முதல் கட்ட நீரேற்று நிலையத்திற்கு இன்று இந்தியா முழுவதும் பயன்படும் மின்சாரம் தேவைப்படும் என்று அன்றைய மத்திய அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறாரே, ஆகவே இந்தத் திட்டத்திலே ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கின்றதா என்று கேட்டார்கள். உடனே அமைச்சர் இராஜா முகமது அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவது உண்மைதான், எனவேதான் காவிரி-கோதாவரி இணைப்பு பற்றி இப்போது பரிசிலித்துக் கொண்டிருக்கிறோம் என்று பதில் சொன்னார்கள். நாட்டின் ஒரு நன்மையைக் கருதி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்தை வேண்டும் என்றே சென்னை வானொலி நிலையத்தினர் 1—3—1982 மாலை 7.00 மணி ஒலிப்பரப்பில் சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றிக் குறிப்பிட்டபோது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்வியையும் அதற்கு அமைச்சர் சொன்ன பதிலையும் இருட்டடிப்பு செய்திருக்கிறார்கள். கேள்வி பதில் சம்பந்தமாக ஒரு பகுதியை மட்டும் சொல்லிவிட்டு மறுபகுதியை இருட்டடிப்பு செய்தது வேண்டுமென்றே திட்டமிட்டு உள்நோக்கத்தோடு செய்யப்பட்ட காரியமாகும். கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் சாத்தியம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்து காவிரி-கோதாவரி இணைப்பு பற்றி பரிசீலிக்கிறோம் என்று சொல்வது ஒரு அடிப்படை திட்டத்தைக் கைவிட்டு வேறு திட்டத்தைப் பரிசீலிக்கிறோம் என்று ஒரு புது திட்டத்தை அறிவிக்கிறார். ஆனால் வானொலி நிலையமோ கைவிடப்பட்ட திட்டம் பற்றிய கேள்வியை மட்டும் அறிவித்துவிட்டு அந்தத் திட்டத்தைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்வி, அதற்கு அவர்கள் வைத்த வாதம், அதற்குப் பின்னாலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் சொன்ன பதில், திட்டம் இவைகளைப்பற்றி எல்லாம் சென்னை வானொலி நிலையம் வேண்டுமென்றே அரசியல் உள்நோக்கத்தோடு வானொலியிலே ஒலிப் பரப்பாமல் புறக்கணிப்பு செய்திருக்கிறது. இது வேண்டுமென்றே திட்டமிட்ட உள்

நோக்கமாகும். சபையின் உரிமையை மீறல் காரியமாகும். மக்களுடைய வரிப்பணத்திலேதான் வானொலி நிலையம் நடைபெறுகின்றது. அப்படிப் பட்ட ஒரு நிலையம் அரசியல் உள்நோக்கத்தோடு இயங்கக்கூடாது. ஆளும் கட்சியினருடைய கருத்துக்களை மட்டும் எதிரொலிக்கின்ற அமைப்பாக அது இருக்கக்கூடாது. எனவே இது அவையினுடைய உரிமையை மீறிய காரியம். எனவே கேள்வி-பதில் பற்றிச் சொல்கின்றபோது முழுமையாக சொல்ல வேண்டுமே தவிர, அதிலே ஒரு பகுதியை மட்டும் வெளியிட்டுவிட்டு மறு பகுதியை அரசியல் உள்நோக்கத்தோடு இருட்டடிப்பு செய்வது தவறு. ஆனால் அப்படிச் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே இதை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்பி அவர்கள் இதுபற்றி விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப் பிரச்சினை குறித்து வானொலி நிலையத்தாருக்கு எழுதி விளக்கம் கேட்டு பிறகு எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வட ஆற்காடு மாவட்டத்தில் மின்தடை மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையம் இயங்காதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் "வடாற்காடு மாவட்டம் திருவண்ணாமலை மின் திட்டத்தில் திருவண்ணா மலை, போளூர், காஞ்சி, நாயுடுமங்கலம், அவலூர்பேட்டை, கீழ்பெண்ணாத்தூர், தண்டராம்பட்டு முதலிய துணை மின் நிலையப் பகுதிகளில் அடங்கிய கிராமங்களில் சென்ற 27—2—1982-ல் இருந்து பெரிதும் மின்தடை ஏற்பட்டுள்ளதால் பல்லாயிரம் ஏக்கர் நெற்பயிர் சாவியாகும் அபாய நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்பு கொடுத்துள்ளார்.

திருவாளர்கள் இல. பலராமன், கே. ஆர். சுந்தரம், ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம், ரா. கிருஷ்ணன், என். எ. பூங்காவனம், எஸ். ஆண்டித்தேவர், கே. எம். தங்கமணி, ஆர். சுந்தரமூர்த்தி, ப. சுந்தரம், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், எஸ். என். இராமசாமி, இ. முத்துராமலிங்கம், கே. நாராயண சாமி, பாபு ஜனார்த்தனம், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் இதே பொருள் குறித்தும், மேலும் தூத்துக்குடி அனல் மின்நிலையம் இயங்காதது குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்;